இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்ப கல்வித் துறை
கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி
இறுதிப் பரீட்சை

**EPU4236** – முன்பிள்ளை மற்றும் ஆரம்ப கல்வி ஆசிரியர்களின் தொழில்வாண்மை வகிபங்கு

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி : **05/03/2023** நேரம்: மு.ப 09.30 – பி.ப 11..30

1. "மாணவர்களின் எதிர்கால நன்மைக்காக கல்வியை கூடிய வினைத்திறனுள்ளதாக மாற்றியமைக்க ஆசிரியர் மையக் கல்வியானது மாணவர் மையக் கல்வியாக மாற்றியமைப்படல் வேண்டும்." நீங்கள் மேலுள்ள கூற்றினை ஏற்றுக்கொள்கிறீரா? உமது விடையை நியாயப்படுத்துக.

2. "மறைமுக அறிவுறுத்தல்" எனும் பதத்தினை விளக்குக.

3. "கற்றற் சூழல் என்பது தனியே பௌதீக இடம் அல்ல. ஆனால் கற்றற் சூழல் என்பது கற்றல் - கற்பித்தல் நடைபெறும் ஏதாவதொரு வெளியாகும்."
   நீங்கள் மேலுள்ள கூற்றை ஏற்றுக்கொள்கிறீரா? உமது விடையை நியாயப்படுத்துக.

4. இலங்கையின் தற்போதைய ஆரம்ப கல்வியின் நிலையினை விளக்குக.

5. இலங்கையின் ஆரம்ப பாடசாலை முறைமை தொடர்பாக பின்வரும் பதங்களை விளக்குக.
   அ). புகுமுகத் தேர்ச்சிகள் ஆ). அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள்

6. "வினைத்திறனுடைய ஆசிரியர்" என்னும் பதத்தினை விளக்குக.

7. "வாண்மைத் திறன் அறிவில் நான்கு (04) பிரிவுகள் காணப்படுகின்றன." அவற்றினை பட்டியலிடுக.

8. வினைத்திறனுடைய ஆசிரியருக்கான சட்டகத்தை வரைந்து விளக்குக.

**(5x8=40 புள்ளிகள்)**

## பகுதி II

9. "பன்னிரண்டு ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கும் கற்றல்- கற்பித்தல் கோட்பாடுகள் உள்ளன. அவை மைய மாறலுக்கு துணைபுரிந்து கூடியளவு தன்மயப்படுத்தப்பட்ட கற்றல் செய்முறையை ஆதரிக்கும்"

i. அக் கோட்பாடுகளை பட்டியலிடுக.

(06 புள்ளிகள்)

ii. மேலே நீங்கள் பகுதி i இல் பட்டியலிட்டவைகளுள் ஏதாவது மூன்றினைத் (03) தெரிவுசெய்து விளக்குக.

(06 புள்ளிகள்)

iii. "ஆசிரியரை மையமாகக் கொண்ட கற்பித்தல் பாணியில் இருந்து மாணவரை மையமாகக் கொண்ட கற்பித்தல் பாணிக்கு மாறுவதே இறுதி இலக்காகும்." நீங்கள் மேலுள்ள கூற்றினை ஏற்றுக்கொள்கிறீரா? உமது விடையை நியாயப்படுத்துக.

(08 புள்ளிகள்)

10.

i. "தொழில்வாண்மை" " தொழில்வாண்மை அற்ற" ஆகிய பதங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. "கற்பித்தல் ஓர் உன்னத தொழிலாகும்"
இக் கூற்றினை ஏற்றுக்கொள்கிறீரா? உமது விடையை நியாயப்படுத்துக.

(12 புள்ளிகள்)

11.

i. கற்றற் சூழல் என்றால் என்ன?

(05 புள்ளிகள்)

ii. நேரான கற்றற் சூழலின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(05 புள்ளிகள்)

iii. பாரம்பரிய ஆசிரியர் மைய வகுப்பறைச் சூழல், நேரான கற்போன் மைய வகுப்பறைச் சூழல் என்பவற்றை பின்வரும் அம்சங்களின் அடிப்படையில் வேறுபடுத்துக.

அ) தொடர்பு
ஆ) வகுப்பறையில் இருப்போர் யார்?
இ) அமரும் ஒழுங்கமைப்பு
ஈ) கற்றல் சாதனங்கள்
உ) வளங்கள்
ஊ) மதிப்பீடு

(10 புள்ளிகள்)

12.

i. ஆசிரியரின் நான்கு (04) வகிபாகங்களையும் பட்டியலிடுக.

(02 புள்ளிகள்)

ii. அந்த வகிபாகங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. "ஆசிரியரொருவரின் வகிபங்கானது பல்மையமானது. மேலும் இது உள்ளக செயற்பாடுகளினதும் செல்வாக்கிற்குட்பட்டது." இக்கூற்றினை ஏற்றுக்கொள்கிறீரா? உமது விடையினை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

13.

i. கணிப்பீட்டின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. வரைபடத்தினை வரைந்து புளூமின் பகுப்பியலை விளக்குக.

(05 புள்ளிகள்)

iii.

அ) விருத்திநிலைக் கணிப்பீடு (இடைநிலைக் கணிப்பீடு), தொகுத்தறி கணிப்பீடு (இறுதி நிலைக் கணிப்பீடு) ஆகிய பதங்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

ஆ) ஆரம்ப வகுப்புக்களில் விருத்திநிலைக் கணிப்பீட்டைப் பயன்படுத்துவது ஏன் தொகுத்தறிகணிப்பீட்டைப் பயன்படுத்துவதிலும் சிறந்தது?

(05 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*